# திருச்சாலகச் சோதி தம்பிரானே!

மாதம் ஒரு திருப்புகழ்



– சித்ராமூர்த்தி

உரைக்கா ரிகைப்பா லெனக்கே முதற்பேர்
  உனக்கோ மடற்கோவை ......யொன்றுபாட
உழப்பா திபக்கோ டெழுத்தா ணியைத்
  தேடுனைப்பா ரிலொப்பார்கள் ......கண்டிலேன்யான்

குரைக்கான வித்யா கவிப்பூ பருக்கே
  குடிக்காண் முடிப்போடு ......கொண்டுவாபொன்
குலப்பூ ணிரத்நா திபொற்றூ செடுப்பா
  எனக் கூறிடாப்பாடின் ......மங்குவேனோ

அரைக்காடை சுற்றார் தமிழ்க் கூடலிற்போய்
  அனற்கே புனற்கேவரைந்த .....ஏடிட்டு
அறத்தா யெனப்பேர் படைத்தாய் புனற்சேல்
  அறப்பாய் வயற்கீழமர்ந் ......வேளே

திரைக் காவிரிக்கே கரைக் கானகத்தே
  சிவத்யான முற்றோர் ......சிலந்தி நூல் செய்
திருக்கா வணத்தே இருப்பா ரருட்கூர்
  திருச்சாலகச் சோதி ......தம்பிரானே.

**பொழிப்புரை:**

உரைக்கா ரிகைப்பா லெனக்கே முதற்பேர்

“காரிகை எனும் யாப்பிலக்கண நூலைக் கற்றுத் தேர்ந்த முதன்மையானவன் என்ற பெருமை எனக்கே உண்டு; (பொருள் படைத்த வனைப் பார்த்து)

உனக்கோ மடற்கோவை ஒன்றுபாட உழப்பாது இபக்கோடு எழுத்தாணியைத் தேடு

உன் பெயரில் மடல் கோவை ஒன்றுபாட, காலம் தாழ்த்தாமல் யானைத் தந்தம் (இபக் கோடு) பூண் போடப்பட்ட எழுத்தாணியைத் தேடி எனக்குக் கொடு என்று கூறுவர். (அந்த எழுத்தாணி கிடைத்தவுடன்)

உனைப் போல் பாரில் ஒப்பார்கள் கண்டிலேன் யான்:

“இவ்வுலகில் உனக்கு ஒப்பான தர்மபிரபுவை நான் பார்த்ததில்லை.

குரைக்கு ஆன வித்யா கவிப்பூபருக்கே குடிக்காண் முடிப்போடு கொண்டு வா பொன்

பெருமைமிக்க உயர்ந்த கல்வி படைத்த கவிச் சக்ரவர்த்திக்கு நீயே இருப்பிடம்; அடைக்கலம்; எனக்குப் பொன் முடிப்பைத் தருவாயாக (அத்துடன்)

குலப்பூண் இரத்னாதி பொன்தூசு எடுப்பாய்

சிறந்த ரத்ன ஆபரணங்களும், பொன்னாடையும் தரவேண்டும்.

இவ்வாறெல்லாம் பொருள் உடையவர்களைப் பார்த்து கூறித் துன்பக் கடலில் மூழ்கி மெலிவேனோ (பதினொன்றாம் நூற்றாண்டில் அமிர்தசாகரர் இயற்றிய யாப்பிலக்கண நூல் காரிகை என்பது. அருணகிரியார் காலத்திற்கு முற்பட்ட நூல் அவர் காலத்தில் நன்கு பயிலப் பட்டது என்பதும், எழுத்தாணிக்கு தந்தப்பிடி போட்டிருந்தார்கள் என்பதும் இப்பாடல் மூலம் தெளிவாகிறது.)

பாடலின் பிற்பகுதியில் ஞானசம்பந்தர் பற்றிய குறிப்பு வருகிறது. (முருகப் பெருமான், தன் வேல், மயில், சேவல் இவற்றை மறைத்து ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பது அருணகிரியாரின் ஆணித்தரமான கருத்து) திகம்பரர்களாகிய சமணர்கள் வாழ்ந்த மதுரை மாநகருக்குச் சென்று சமணர்களுடன் அனல்–புனல்வாதம் செய்து “அறத்தாய்” (அறச்செல்வன், அறப் பெருந்தலைவன்) எனும் பெயர் பெற்றாய் என்று முருகனிடம் கூறுகிறார்.